**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI**

**MCOP. No. 48/2017**

**PW - 2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : | சண்முகம் | | : |
| **Father Name** | : | கிருஷ்ணன் | | : |
| **Village** | : | | **Calling** | : |
| **Taluk** | : | | **Age** | : /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of June 2025.)**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2–ம் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**குறுக்கு விசாரணை**

மனுதாரர் கற்பகம் எனது உடன்பிறந்த சகோதரி ஆவார். விபத்தானது 2011–ம் ஆண்டு ஜீலை மாதத்தில் அவிநாசி பழைய பேருந்து நிறுத்தத்தில் வைத்து நடந்தது. அப்போது நான் தான் மனுதாரர் கற்பகத்தை பஸ் ஸ்டாப்பிற்கு அழைத்து வந்தேன். விஏஎஸ் பஸ் திருப்பூரிலிருந்து கோவை நோக்கி சென்றது. அந்த பேருந்து பஸ் நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட தாயராகும் போது வண்டியை வேகமாக எடுத்து விட்டதால் மனுதாரர் கீழே விழுந்து விட்டார். நான் சொல்வது பொய் என்றும், பேருந்து பஸ் ஸ்டாப்பில் நின்று கிளம்பும் போது மெதுவாக தான்

செல்லும் என்றும், அதனால், இந்த விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரரை பஸ் நிறுத்தத்திற்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு நான் சென்று விட்டேன் என்றும், அதற்கு பிறகு நடந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் எனது தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.19 18:36:04 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**